பக்கங்கள் நான்கு — விலை ரூபா 4-50

# முரசொலி

முரசு 35 ஒலி 89 பிரமோதூத மாசி 12
1991 பெப்ருவரி 24ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை

## தாய்லாந்து ஆட்சி இராணுவம் கவிழ்ப்பு

தாய்லாந்து பிரதமர் சாக்கங்சாய் சுனூவாரின் ஆட்சி இரத்தம் சிந்தா புரட்சி மூலம் கவிழ்க்கப்பட்டுள்ளது. ஆட்சிக் கவிழ்ப்பை தாய்லாந்து இராணுவத்தளபதி ஜெனரல் சங்கரால் கொல்பாங் வானொலி மூலம் அறிவித்தார். தாய்லாந்து பிரதமருக்கும் இராணுவத்தின்

— 04 ஆம் பக்கம் பார்க்க

## வடபகுதிக்கு மின்சாரம் வழங்குவதில் அமைச்சுகளிடையே இழுபறி!

வடபகுதிக்கு மின்சாரம் வழங்குவது தொடர்பாக மின்சக்தி எரிபொருள் அமைச்சுக்கும், பாதுகாப்பு அமைச்சுக்கும் இடையில் இழுபறி நிலை தோன்றியுள்ளதாக கொழும்பு செய்திகள் தெரிவிக்கின்றன. கடந்த வாரம் கொழும்பில் இவ் இரு அமைச்சுக்கும் இடையில் வடபகுதிக்கு மின்சாரம் வழங்குவது சம்பந்தமாக பேச்சு வார்த்தை நடைபெற்றது. வடபகுதியில் இருந்து சென்ற மின்சாரசபை அதிகாரிகள், மின்சக்தி எரிபொருள் அமைச்சுடன்

—4 ஆம் பக்கம் பார்க்க

# அரசாங்க அனுமதியின்றி தெற்கில் ஊர்வலங்கள்?

## எதிர்க்கட்சிகள் ஆலோசனை

**அரசாங்கத்திடம் இருந்து அனுமதி பெறாது ஆர்ப்பாட்ட ஊர்வலங்களையும், கூட்டங்களையும் நடாத்த எதிர்க்கட்சிகள் ஆலோசித்து வருவதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.**

கடந்த வாரம் கொழும்பில் நடைபெற்ற அன்னையர் முன்னணியின் ஊர்வலம் அரசின் அனுமதி பெறாமலே நடைபெற்றதும், முன்னணியினர் பாரதூரமான விளைவுகளைச் சந்திக்க நேரிடும் என அமைச்சர் ரஞ்சன் விஜேரட்ன எச்சரிக்கையைப் பொருட்படுத்தாததும் குறிப்பிடத்தக்கது.

பதவியிழந்த பங்களாதேஷ் ஜனாதிபதியாலும் ஊர்வலங்களைத் தடைசெய்ய முடியவில்லை எனவும் மக்கள் அவ

— 04 ஆம் பக்கம் பார்க்க

## ஆசிரியர்கள் படுகொலையை கண்டித்து மன்னார் எங்கும் மாணவர் போராட்டம்

மன்னார் மாவட்டத்தில் பாடசாலை மாணவர்கள் வீதி மறியல் போராட்டத்திலும் வகுப்புகளை பகிஷ்கரித்தும் வருகின்றனர்.

கடந்த 17 ஆம் திகதி இரு பாடசாலை ஆசிரியர்கள் வங்காலை இராணுவத்தால் படுகொலை செய்யப்பட்டதை கண்டித்தே மன்னார் மாணவர்கள் போராட்டம் நடாத்தி

— 04 ஆம் பக்கம் பார்க்க

## வவுனியா தமிழ் பகுதிகளுக்கு நீர் மின்சாரம் வெட்டு

வவுனியாப் பகுதியில் விநியோகிக்கப்படும் நீர் மின்சாரம் தமிழ் பகுதிகளுக்கு நிறுத்தப்பட்டுள்ளதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

தமிழ்பகுதிக்குசெல்லும் நீர் மின்சார வயர்களை இராணுவத்தினர் திட்டமிட்டு அறுப்பதாகவும்கூறப்படுகிறது (70)

## யாழ் நகர் பகுதியில் ஹெலி துப்பாக்கி வேட்டு

கடந்த சில தினங்களின் பின்னர்ஹெலிகொப்டர் ஒன்று நேற்று பகல் 11 மணியளவில் பலதடவைகள் யாழ் நகர்பகுதியை வட்டமிட்டு கண்காணித்தது.

இந்த ஹெலிகொப்டர் சில தடவைகளில் துண்டுப்பிரசுரங்களை வீசியதுடன் பல தடவைகள் வழமைபோல் வேட்டுக்களை தீர்த்தது. (74)

## வடபகுதி மின்சாரசபை ஊழியர்களை தெற்கிற்கு இடமாற்ற அமைச்சு முயற்சி

வடபகுதியைச் சேர்ந்த மின்சாரசபை அதிகாரிகள், ஊழியர்களை தென்னிலங்கை பகுதிக்கு இடமாற்றுவது தொடர்பாக மின்சக்தி எரிபொருள்துறை அமைச்சு ஆராய்ந்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

— 04 ஆம் பக்கம் பார்க்க

## மன்னார் ஆசிரியர்கள் கொலைக்கு ஆசிரியர் சங்கம் கண்டனம்

வங்காலையில் கடமைக்குச் சென்ற அதிபர், ஆசிரியர்கள் இராணுவத்தால் கொல்லப்பட்டும் பலர் இராணுவத்தால் தடுத்து வைக்கப்பட்டும் உள்ள சம்பவத்தை இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் வன்மையாகக் கண்டித்துள்ளதோடு இவ்விடயத்தை ஜனாதிபதி, கல்வி அமைச்சர் ஆகியோரின் கவனத்துக்கு கொண்டுவந்துள்ளார்.

இது தொடர்பாக அனுப்பிய தந்தியில் தடுத்து வைக்

— 04 ஆம் பக்கம் பார்க்க

## கிளிநொச்சி, மாங்குளம், சாவகச்சேரி பரவலாக வான் தாக்குதல்

மாங்குளம், கிளிநொச்சி, சாவகச்சேரி ஆகிய இடங்களில் நேற்று இடம்பெற்ற பொம்மர், ஹெலித்தாக்குதல்களில் பலர் படுகாயமடைந்ததுடன் வீடுகளும் தரைமட்டமாகியுள்ளன.

கிளிநொச்சி திருநகர்ப்பகுதியில் நேற்றுக் காலை 10 மணிக்கும் 11 மணிக்கும் இடையில் மாறி மாறி இரண்டு குண்டுவீச்சு விமானங்கள் நடத்திய தாக்குத

— 04. ஆம் பக்கம் பார்க்க

## கொள்ளைலாபம் அடிக்கும் தனியார் பார்மஸிகள்

யாழ் மாவட்டத்தில் உள்ள தனியார் மருந்து விற்பனை நிலையங்கள் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி மக்களைச் சுரண்டும் செயலைத் தொடர்வதாக புகார் செய்யப்பட்டுள்ளது.

இவர்களுக்கு குறிப்பிட்ட தொகை மருந்து வகைகளைச் செஞ்சிலுவைச் சங்கம் குறைந்த போக்குவரத்துச்

— 04 ஆம் பக்கம் பார்க்க

## ஹெலிக்கு பயந்து ஓடியவர் சைக்கிளில் மோதி காயம்

அராலிப் பகுதியில் வட்டமிட்டு தாழப்பறந்த ஹெலிகொப்டரைக் கண்டு ஓடிய குடும்பஸ்தர் ஒருவர் துவிச்சக்கர வண்டி ஒன்றுடன் மோதியதனால் பலத்த காயமடைந்தார்.

புங்குடுதீவு 10 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த க. விசயன் (25) புங்குடுதீவு அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவருகின்றார். (20)

## கட்டுவன் இராணுவம் இரவில் வெளியேறும் முயற்சி முறியடிப்பு

நேற்று முன்தினமிரவு 7.30 மணியளவில் கட்டுவன் குரும்பசிட்டி பகுதியிலிருந்து இராணுவத்தினர் வெளியேற முயன்ற போது விடுதலைப் புலிகள் கடும் எதிர்த்தாக்குதலை மேற்கொண்டனர். இம்மோதல் பல மணி நேரம் நீடித்தது.

படையினரின் முயற்சி பலனளிக்காததைத் தொடர்ந்து படையினர் பலத்த ஆட்லறி ஷெல் தாக்குதலை மேற்கொண்டனர். படையினர் ஏவிய ஷெல்கள் சுன்னாகம், மல்லாகம் பகுதிகளில் வீழ்ந்து வெடித்தன. (48)

## 9-ம் ஆண்டு தொழில் பாடநெறி யாழ் மாவட்டத்திலும் அறிமுகமாகும்

புதிதாக கல்வி அமைச்சினால் அமுல்படுத்தப்பட்டுள்ள 9-ம் ஆண்டு மாணவர்களுக்கான தொழில்நுட்பபாடநெறிகள் யாழ் மாவட்டப் பாடசாலைகளிலும் அறிமுகப்படுத்தப்படவுள்ளதாக வட பிராந்திய கல்விப் பணிப்பாளர் தெரிவித்தார்.

53 தொழில்நுட்ப பாடநெறிகள் இனங்காணப்பட்டு விவசாயம், வர்த்தகம், மனையியல், தொழில்நுட்பம் எனும் பிரிவுகளின் கீழ் வகுப்புக்கள்

— 04 ஆம் பக்கம் பார்க்க

## இராணுவத்தின் தடையினால் உணவுப் பொருள்கள் பழுதடைகிறது

முல்லைத்தீவுக்கென எடுத்து வரப்பட்ட உணவுப் பொருள்கள் வவுனியாத் தடை முகாமில் பழுதடையும் நிலையில் உள்ளன.

மூன்று வாரங்களுக்கு மேலாக கொழும்பிலிருந்து கொண்டு வரப்பட்ட உணவுப் பொருள்களை முல்லைத்

— 04 ஆம் பக்கம் பார்க்க

# யாழ் மாவட்டத்தில் ஓய்வு பெற்ற பல ஆசிரியர்கள் ஒப்பந்த அடிப்படையில் பணிபுரிய விண்ணப்பம்!

யாழ் மாவட்டத்திலிருந்து சுயவிருப்பு ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் ஓய்வு பெற்ற பல ஆசிரியர்கள் ஒப்பந்த அடிப்படையில் மீண்டும் சேவையாற்ற விண்ணப்பித்துள்ளனர்.

இளைப்பாறியவர்களை மீண்டும் ஒப்பந்த அடிப்படையில் குறிப்பிட்ட காலத்திற்கு சேவையாற்ற அனுமதிப்பதென்ற அரசின் புதிய முடிவுக்கமையவே இவர்கள் மீண்டும் சேவையாற்ற சம்மதித்துள்ளனர்.

இது இவ்வாறிருக்க விசேட திட்டத்தின் கீழ் இதுவரை இளைப்பாறிய எவருக்கும் தற்காலிக ஓய்வூதியக் கொடுப்பனவு வழங்கப்படவில்லை. இவர்களால் சமர்ப்பிக்கப்பட்ட படிவங்கள் இவ்வாரமளவிலேயே ஓய்வூதியத் திணைக்களத்திற்கு அனுப்பப்படவுள்ளதாகவும் அறியப்படுகின்றது. (ப-17)

## திறன்மிகு பௌதிக ஆசிரியரைத் தெரிவுசெய்ய 'புதியன கண்டுபிடிக்கும்' தேசியப் போட்டி!

இலங்கை பௌதிக நிறுவனம் புதியன கண்டுபிடிக்கும் திறன் மிக்க பௌதிக ஆசிரியரைத் தேர்ந்தெடுக்கும் போட்டியொன்றை நாடெங்கிலும் உள்ள பாடசாலைகளில் க. பொ. த. (உயர்தரம்) கற்பிக்கும் பௌதிக ஆசிரியர்கள், க.பொ.த.(சாதாரணம்) கற்பிக்கும் விஞ்ஞான ஆசிரியர்களிடையே நடாத்த உள்ளது.

இப் போட்டியில் பங்கு கொள்வோர் நவீன கற்பித்தல் முறை உபகரணங்களின் வரிப் படங்களுடன் விபரங்களைச் சமர்ப்பிக்க வேண்டுமெனவும் கோரப்பட்டுள்ளது.

இதற்கான விண்ணப்பப் படிவங்களை கொழும்பில் அமைந்துள்ள இலங்கைப் பௌதிக நிறுவனத்திலிருந்து பெற்றுக் கொள்ள வேண்டும். (ப-17)


## நேர்முகப் பரீட்சை

20-02-91 இல் நடைபெற இருந்து ஒத்தி வைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சை 27-2-91 புதன் காலை 10.00 மணியளவில் சமாச காரியாலயத்தில் நடைபெறும். 20-2-91 இல் நேர்முகப் பரீட்சைக்கு கடிதங்கள் கிடைக்கப் பெற்ற விண்ணப்பதாரிகள் மட்டும் உரிய ஆவணங்களுடன் சமூகமளிக்கும் வண்ணம் வேண்டுகின்றேன்.

சங்கானை வடிசாலை, கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம். பொதுமுகாமையாளர்

02125


## அடிக்கடி இடம் மாறும் ஆண் விடுதிகள்

தற்போது மானிப்பாயில் தற்காலிகமாக இயங்கி வரும் தெல்லிப்பழை அரசினர் வைத்திய சாலையில் உள்ள ஆண் நோயாளர்கட்குரிய வார்ட்டுக்கள் அடிக்கடி இடம் மாற்றப்பட்டு வருகின்றன.

ஆரம்பத்தில் மேல் மாடியில் இயங்கிய இவ் வாட்டுக்கள் பின்னர் கீழ் மாடிக்கு மாற்றப்பட்டன. ஆனால் அங்கும் தொடர்ந்து இயங்காமல் மீண்டும் வேறோர் மேல் மாடிக்கு மாற்றப்பட்டுள்ளன.

இவ்வாறு அடிக்கடி வார்ட்டுக்கள் இடமாற்றம் செய்யப்படுவதால் நோயாளர்களும் அவர்களை பார்வையிடச் செல்லும் உறவினர்களும் பெரும் கஷ்டங்களிற்கு உள்ளாக வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. (ப-33)

## 'மாருதி' ஏற்றுமதி

இந்தியாவில் தயாரிக்கப்பட்ட 10,600 மாருதி கார்கள் ஹங்கேரிக்கு ஏற்றுமதி செய்யப்படவுள்ளன.

இவை தவிர இத்தாலி, பிரான்ஸ், போர்த்துக்கல் ஆகிய நாடுகளுக்கும் மாருதி கார்கள் ஏற்றுமதி செய்யப்படவுள்ளன.

## தகவல் பிரிவுக்கு நிருபர் சேர்ப்பு

தென்மராட்சி விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் செய்தித் தகவல் பிரிவுக்கு தென்மராட்சி, பச்சிலைப் பள்ளி பிரிவுகளிலுள்ள 78 கிராம சேவையாளர் பிரிவுகளிலுமிருந்து நிருபர்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

எழுத வாசிக்கத் தெரிந்தவர்கள் தென்மராட்சி விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி அலுவலகத்திற்கு வந்து செய்தித் தகவல் பிரிவுடன் தொடர்புகொண்டு விண்ணப்பப்படிவங்களையும், விபரங்களையும் பெற்றுக் கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ப-5)


## காலமானார்

### இளையதம்பி சாமுவேல் சண்முகம்
(உபதேசியார்)

நாகர்கோவில் இளையதம்பி சாமுவேல் சண்முகம் 1991-02-15ம் திகதி காலமாகிவிட்டார். அன்னார் (மலேரியா தடை இயக்க வெளிக்கள உதவியாளர் யேசுநேசனின் வவுனிக்குளம்) தந்தையும் கமலாம்பிகையின் மாமனாரும் சத்தியகௌரி, சத்தியரூபி சத்தியசுதன், சத்தியகீதா ஆகியோரின் பேரனுமாவார். அன்னாரின் நல்லடக்கம் 1991-02-16 ஆம் திகதியன்று பாண்டியன் குளம் வவுனிக்குளத்தில் நடைபெற்றது. உற்றார், உறவினர், நண்பர்கள். இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

31 ஆம் நாள் ஆராதனைக் கொண்டாட்டம் 1991-03-16 ஆம் திகதி பாண்டியன் குளத்தில் நடைபெறும்.

தகவல்:- சா. யேசுநேசன் (மகன்)

02123


## செய்திக் கொத்து

### ஷெல் தாக்குதலில் வீடு தீக்கிரை

குரும்பசிட்டிப் பகுதியில் நிலை கொண்டுள்ள ராணுவத்தினர் கடந்த வியாழக்கிழமை இரவு மேற்கொண்ட ஷெல் குண்டுத் தாக்குதலினால் ஏழாலை மத்தியில் உள்ள தில்லையம்பலம் பொன்னம்மா என்பவரினது மண்வீடு எரிந்து சாம்பலாகியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வேளை அருகிலுள்ள மற்றொரு மண் குடிசையில் இவர்களது குடும்பத்தினர் நித்திரையில் இருந்ததால் தெய்வாதீனமாக உயிர் தப்பினர் எனக் கூறப்படுகிறது.

இதே தினம் பகல் வேளையில் ராணுவத்தினர் மேற்கொண்ட அப்பாவிப் பிரயோகத்தினால் இப் பகுதியில் பவளம் என்ற குடும்பப் பெண்மணி கழுத்தில் காயமடைந்தார். (ப-32)

### வைத்திய அபிவிருத்தி நிதி சேகரிப்பு

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை அபிவிருத்திச் சபையினர் வைத்தியசாலை அபிவிருத்திக்காக நிதி சேகரிக்கும் முகமாக வடமராட்சி வடமராட்சிகிழக்கு பகுதிகளிலும் அரசாங்க தனியார் ஸ்தாபனங்கள், பாடசாலைகள், தனியார் கல்வி நிறுவனங்கள், வர்த்தக ஸ்தாபனங்களில் கொடிவிற்பனை மூலம் நிதி சேகரித்து வருகின்றனர் (18)

### கவிஞர் துரைக்கு சாகித்தியப் பரிசு

குழந்தை இலக்கிய எழுத்தாளரும், கல்வி அதிகாரியுமான கவிஞர் த. துரைசிங்கத்திற்கு சிறுவர் இலக்கியத் துறைக்கான தேசிய தமிழ்ச் சாகித்திய பரிசு கிடைத்துள்ளது.

1989 ஆம் ஆண்டில் இவர் வெளியிட்ட குழந்தைப்பாடல்கள் என்னும் நூலுக்காகவே இப் பரிசு வழங்கப் படுகின்றது. ஏற்கனவே சிறுவர்களுக்கான பல்வேறு கவிதை நூல்களைத் திரு. துரைசிங்கம் எழுதியுள்ளார்.

### கூட்டுறவு கருத்தரங்கு

'கூட்டுறவுத் திணைக்கள உத்தியோகத்தர்களுக்கான விசேட கருத்தரங்கு 25 ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 1.00 மணிக்கு யாழ்ப்பாணம் கூட்டுறவு அலுவலகத்தில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.


CLASSES IN ENGLISH
TYPING
SCHOOL OF BUSINESS ADMINISTRATION
16, 3 RD. CROSS ST,
JAFFNA.



## காலமானார்

### சிவநாயகி தியாகராசா

தெல்லிப்பழை துர்க்காபுரத்தைச் சேர்ந்த சிவநாயகி தியாகராசா 12-2-91 சிவராத்திரி புண்ணிய தினத்தில் சிதம்பரத்தில் சிவபதமடைந்தார். அன்னார் அமரர். சட்டநூலறிஞர் திரு க தம்பையாபிள்ளை அவர்களின் அருமைப் புதல்வியாரும், அமரர். இளைப்பாறிய பெரும்பாகக் கல்விப் பணிப்பாளரும், ஸ்ரீ துர்க்காதேவி ஆலய முன்னைநாள் தலைவருமாகிய திரு சே. தியாகராசா அவர்களின் பிரிய பத்தினியாரும், இளைப்பாறிய இராமநாதன் கல்லூரி ஆசிரியை சகிதேவி அவர்களின் அன்புத் தாயாரும், இளைப்பாறிய ஆங்கில விரிவுரையாளர், பலாலி திரு. இ. கந்தையா அவர்களின் அன்பு மாமியாரும், வைத்திய கலாநிதி சந்திரகுமார் (Brompton Heartlung Institute, U K), சத்திகுமார் (B.Sc Electronics U. K), யோககுமார் (U. K) ஆகியோரின் பாசமுள்ள பேத்தியுமாவார். அன்னாரின் ஈமக்கிரியை சிதம்பரத்தில் நடைபெற்றது. இவ்வறிவித்தலை உறவினர், நண்பர்கள் யாபேரும் ஏற்றுக் கொள்க.

"சிவநிலையம்", தெல்லிப்பழை. 23-02-91

சகிதேவி கந்தையா மகள்

02124

## பாலைவனக்கப்பல் - அங்கே படாதபாடு படுகிறது!

பாலைவனப் பிரதேசத்தில் மனிதர்கள் படும்பாடு தெரிகிறது - 'பாலைவனக் கப்பல்' எனப்படும் ஒட்டகங்களுக்கு என்ன நடக்கிறது என்பது பற்றி வந்துள்ள தகவல் இது.

அவுஸ்திரேலியாவில் இந்த ஒட்டகங்கள் படாத பாடு படுகின்றனவாம். ஒட்டக இறைச்சிக்கு அங்கு அமோக மவுசு.

இங்கே நம்ம கல்யாணத்தில் கோழிக்குக் கொடுக்கிற 'இடத்தை' அங்கே பார்ட்டிகளில் ஒட்டகக்கறி பிடித்து விடுகிறதாம்,

இதனால் அங்கே ஒட்டகத்தைக் கண்டால் 'சதக்...' 'சதக்' ஓசையும் தொடருமாம்.

## பரந்தன் இரசாயனத்தொழிற்சாலையில் கடமைபுரிந்த 300 ஊழியரை அம்பாந்தோட்டைக்கு மாற்றத்திட்டம்!

பரந்தன் இரசாயனத் தொழிற்சாலையில் கடமையாற்றிய 300 தொழிலாளர்களும் அம்பாந்தோட்டையில் புதிதாக அமைக்கப்படவுள்ள இரசாயனத் தொழிற்சாலைக்கு இடமாற்றப்படவுள்ளனர்.

பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபனத் தலைவர் உபாலி டி. சில்வா இத் தகவலைத் தெரிவித்துள்ளார்.

ஜப்பானின் உதவியுடன் நாற்பது கோடி ரூபா செலவில் புதிய இரசாயனத் தொழிற்சாலை அமைக்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

புதிய தொழிற்சாலை அமைப்பு வேலைகள் விரைவில் ஆரம்பிக்கப்பட்டு பூர்த்தியாக்கப்படுமெனவும், அமைப்பு வேலைகளை ஒழுங்கு படுத்தும் பணியில் பரந்தன் ஊழியர்கள் ஈடுபடுத்தப்படுவரெனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (16)

## தோட்டச் செய்கையில் அக்கறைகாட்டும் பயிலுநர்களுக்கே முதலில் நிரந்தர நியமனம்

பாடசாலைத் தோட்டங்களில் அதிக அக்கறை காண்பிக்கும் ஆசிரியர்களுக்கே பதவி உயர்வில் முன்னுரிமை வழங்கப்படுமென யாழ் கல்விப் பணிப்பாளர் சுற்றுநிருபம் மூலம் பணித்துள்ளார்.

பயிலுநர் ஆசிரியர்களை நிரந்தர சேவைக்குச் சேர்த்துக் கொள்வதற்கு நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும் போது அவர்கள் பாடசாலைத் தோட்டத்தில் எவ்வளவு தூரம் அக்கறை காட்டினர் என்பதுவும் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

பாடசாலைகளில் செய்கை பண்ணப்படும் வீட்டுத்தோட்டங்கள் ஒவ்வொரு தவணையும் யாழ் கல்வித்திணைக்களத்தினால் மதிப்பீடு செய்யப்பட்டு வருட இறுதியில் மூன்று பாடசாலைகள் தெரிவு செய்யப்படும். (ப-17)

## முல்லை. அலுவலகம் இடமாற்றம்

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் முல்லைத்தீவு அலுவலகத்தை வவுனிக் குளத்தில் அமைந்துள்ள நீர்ப்பாசன இலாக விடுதியில் இயங்கவைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதுவரை அங்கு சமுகமளிக்காத ஊழியர்களை கடமைக்கு வருமாறு மாவட்ட முகாமையாளர் கேட்டுள்ளார் (74)

## தென்பகுதி அரசியல் தலைவர்கள் எல்லோரும் குடிகாரர்கள் என்கிறார் ஆரியரத்ன

"தென்னிலங்கை அரசியற் தலைவர்கள் பலரும் குடிகாரர்களுக்கும், சூதாடிகளுக்கும் ஆதரவானவர்களே" என்று சர்வோதயத் தலைவர் கலாநிதி ஏ. ரி. ஆரியரத்ன கூறியுள்ளார்.

பொது நிகழ்ச்சி ஒன்றில் அவர் பேசுகையில் "எனக்குத் தெரிந்த சிறந்த அரசியல் தலைவர் ஒருவர் இருந்தார். நான் அவரிடம் சென்று நீங்கள் பேசும் ஒவ்வொரு அரசியற் கூட்டத்திலும் ஐந்து நிமிட நேரமாவது மதுபானத்துக்கு எதிராகவும் சூதுக்கு எதிராகவும் பேசுங்கள்" எனக் கூறினேன். அவர் சிரித்தார்." குடிகாரர்கள் எமக்குத் தேவை. அவர்கள் இருப்பதால் தான் அரசியல் மேடைகள் நிரப்பப்படுகின்றன. அதேபோல் தேர்தல் காலங்களில் முன்னே சென்று எமக்கு ஆதரவு தேடித்தருகின்றனர். எமது எதிர்க் கட்சியாளரின் கூட்டங்களைக் குழப்புவதற்கு அவர்கள் பயன்படுகின்றனர். குடிகாரர்களுக்கு எதிராகப் பேசினால் எமக்குப் பாராளுமன்றம் செல்ல முடியாத நிலை ஏற்படும்" என்று கூறினார். (16

## 'அவசர காலச் சட்டம் வெளியில் அல்ல பாராளுமன்றத்துக்கு உள்ளேயே அவசியம்'

அவசர காலச் சட்டம் பாராளுமன்றத்திற்கு வெளியே அல்ல - உள்ளே தான் முதலில் அவசியப்படுகின்றது.

இவ்வாறு தெரிவித்திருப்பவர் ஆளுங்கட்சி அமைச்சரான லலித் அத்துலத் முதலி.

கடந்த வியாழக்கிழமை பாராளுமன்றத்தில் உறுப்பினரிடையே ஏற்பட்ட 'அடிதடி' மோதல் பற்றி நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் பிரஸ்தாபிக்கும்போதே லலித் இப்படிக் குறிப்பிட்டார்.

## குருகுலம் கொடிதினம்

குருகுலம் ஆண்டு விழாவும் கொடிதினமும் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் உருத்திரபுரம் குருகுல வெளியரங்கில் நடைபெறவுள்ளன.

பேராசிரியர் கா சிவத்தம்பி பிரதம விருந்தினராக கலந்து கொள்ளவுள்ள இவ் விழாவில் கிளிநொச்சி கல்விப் பணிப்பாளர் கே கந்தசமியும்கலந்து கொள்ளவுள்ளார்.

## சமூகவியல் பயில விண்ணப்பிக்கலாம்

திறந்த பல்கலைக்கழக யாழ் பிராந்திய நிலையத்தில் சமூகவியல் அத்திவாரப் பாட நெறிக்கான விண்ணப்பப் படிவங்கள் தற்போது விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

இரண்டு வருடகாலத்தைக் கொண்டிருக்கும் இப்பாட நெறியைப் பயில விரும்புவோர் அதற்குரிய விண்ணப்பத்தை இம் மாதம் 28 ஆம் திகதிக்கு முன்னர் யாழ் நிலையத்தில் ஒப்படைக்க வேண்டுமெனத் திறந்த பல்கலைக் கழக யாழ் பிராந்திய உதவிப் பணிப்பாளர் மு. தில்லைராஜன் அறிவித்துள்ளார்.

## பாடசாலைகளில் சிற்றுண்டிச்சாலைகள்! இலாபம் மாணவர்களுக்குப் பங்கிடப்படும்!!

ஆசிரியர்கள், மாணவர்களைக் கொண்ட முகாமைத்துவத்தின் கீழ் பாடசாலைகளில் சிற்றுண்டிச்சாலைகளை அமைக்க வேண்டுமென யாழ் கல்விப் பணிப்பாளர் சகல அதிபர்களையும் பணித்துள்ளார்.

பாடசாலைகளில் உள்ள மாணவர்களினால் உள்ளூர் உற்பத்திப் பொருள்களைக் கொண்டு உற்பத்தி செய்யப்பட்ட உணவுப் பொருள்களையே இச்சிற்றுண்டிச் சாலைகளில் சந்தைப்படுத்த வேண்டும் என்றும், இதில் இருந்து கிடைக்கும் இலாபம் மாணவர்களிடையே பங்கிடு செய்யப்பட வேண்டும் என்றும் அவர் கோரியுள்ளார். (ப-17)

## நலன்காக்கும் பிரிவு விவசாயிகளுக்கு உதவி

கோப்பாய் மக்கள் நலன் காக்கும் பிரிவு பூநகரிமடம் முதல் நாயன்மார்கட்டு வரையுள்ள விவசாயிகளை ஊக்குவிக்குமுகமாகப் பல்வேறு உதவிகளைச் செய்துவருகின்றது. இலவசமாக உலர் விதை தானியங்களாகப் பயறு, கௌப்பி போன்றவையும் பயிர்ச்செய்கையிற் தற்போது ஈடுபட்டுள்ள விவசாயிகட்கு ஆரம்பக்கட்ட உதவியாக மண்ணெண்ணெய், உரம் என்பனவும் இலவசமாக வழங்கப்பட்டுள்ளன

தொடர்ந்தும் விவசாயிகளின் உற்பத்தி நடவடிக்கைகளுக்கு ஏற்ப மருந்துவகைகளும், மண்ணெண்ணெய்யும் வழங்கப்படும் எனவும் இவ் உதவி வெளிநாட்டு நிறுவனம் ஒன்றின் அன்பளிப்பு எனவும், அதன்செயலாளர் கா. கணேசலிங்கம் தெரிவித்தார். இந் நிறுவனம் கடந்த காலங்களிலும் இப் பகுதியைச் சேர்ந்த பலருக்குப் பசுவளர்ப்பு, கோழி வளர்ப்பு என்பனவற்றை ஊக்குவிப்பதற்காக நீண்ட காலத்திட்டத்திற் கடன் உதவிகளை வழங்கியமையும் குறிப்பிடத்தக்கது. (23)

## டிப்ளோமா கற்கைநெறி ஒப்படை

இலங்கைத் திறந்த பல்கலைக்கழக யாழ் பிரதேச நிலையத்தில் கடந்த வருடம் பதிவு செய்து கொண்ட மாணவர்களால் ஒப்படைக்கப்பட்ட ஒப்படை இல 01 பட்டமேற் கல்வி டிப்ளோமாவுக்குரிய ஒப்படைகள் திருத்தப்பட்டு யாழ் பிரதேசத் திற்கு வந்துள்ளன.

சம்பந்தப்பட்டவர்கள் திங்கள் தவிர்ந்த ஏனைய நாட்களில் சனி, ஞாயிறு உட்பட அலுவலக நேரத்தில் வந்து தமக்குரிய ஒப்படைகளைப் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் திறந்த பல்கலைக் கழகத்தால் வழங்கப்பட்ட மாணவர் பதிவுப் புத்தகத்தையும் கொண்டு வரவேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ப7)

## 50,000 இளைஞர் காணாமற் போனதை 'அற்ப' சம்பவம் என்கிறார் அமைச்சர்!

அற்ப சம்பவம் ஒன்றுக்காகவே 'அன்னையர் முன்னணி' என்ற அமைப்பு தெற்கில் உருவாக்கப்பட்டுள்ளதாக நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் உரையாற்றிய அமைச்சர் பிரேமச்சந்திரா குறிப்பிட்டுள்ளார்.

50,000 இளைஞர்கள் தெற்கில் 'காணாமல்' போன சம்பவங்களையே அமைச்சர் இவ்வாறு 'அற்ப' சம்பவம் என வர்ணித்துள்ளார் என்று சிங்களப் பத்திரிகை ஒன்று குறிப்பிட்டுள்ளது.

இந்த 'அன்னையர் முன்னணி' பாதுகாப்பு படையினருக்கு எதிரான அமைப்பு எனவும் அமைச்சர் அங்கு தெரிவித்திருந்தார். (16)

## அகதிகளுக்கு 50 குடிசைகள்

இராணுவ நடவடிக்கைகளினால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்து தென்மராட்சி அகதி முகாம்களில் வாழ்ந்தவர்கள் மட்டுவில் தெற்கு துர்க்கை அம்மன் ஆலய வீதிக் காணியில் சுமார் 50 குடிசைகள் அமைக்கப்பட்டு குடியமர்த்தப்பட்டுவருகின்றனர். (ப-4)

# சனசமூக நிலையங்களுக்கு ஒதுக்கப்பட்ட 2 லட்சம் ரூபா பாவிக்கப்படாமல் உள்ளது

பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழ், பாராளுமன்ற உறுப்பினர்களால் சனசமூக நிலையங்களின் அபிவிருத்திக்கு 1989/90 ஆண்டுக்கென ஒதுக்கீடு செய்யப்பட்ட சுமார் இரண்டு லட்சத்துக்கும் அதிகமான பணம் இன்னும் பாவிக்கப்படாமலே இருக்கிறது.

ஐந்து சனசமூக நிலையங்களுக்கு இந்த நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளமையால் ஏனைய சனசமூக நிலையங்கள் மத்தியில் இவ்விடயமாக அதிருப்தி ஏற்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

கிறீன்பீல்ட், சன்மார்க்க ஐக்கிய வாலிபர் சங்கம், எழிலூர், றெக்கிளமேசன், கொழும்புத்துறை ஆகிய சனசமூக நிலையங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட பணம் பாவிக்கப்படாமலிருப்பது குறித்து உரிய சனசமூக நிலையங்கள் யாழ் மாநகர ஆணையாளருடன் தொடர்பு கொண்டு நிதியைப் பெற்றுக் கொள்ள வேண்டுமென்று செயலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (47)

## ராஜீவ் காந்தி சொல்கிறார்

# சந்திரசேகர் அரசுக்கு எவ்வளவுகாலம் ஆதரவு அளிப்பது எனக் கூறமுடியாது

"சந்திரசேகரின் அரசைக் கவிழ்க்கும் நோக்கம் இந்திரா காங்கிரசுக்கு இல்லை" என முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கூறினார்.

இவ்விடயம் பற்றி செய்தியாளர்களிடம் குறிப்பிட்ட ராஜீவ் காந்தி "சந்திரசேகரின் அரசுக்கு இந்திரா காங்கிரஸ் எவ்வளவு காலத்திற்கு ஆதரவு நல்கும் எனத் திட்டவட்டமாகத் தீர்மானிக்கப்படவில்லை. இந்திரா காங்கிரஸ் பொதுத் தேர்தலைச் சந்திக்கத் தயாராக இருக்கிறது. ஆனால் தேர்தல் வைக்கக் கூடிய சூழ்நிலை இல்லை" எனவும் குறிப்பிட்டார்.

# 674 பேர் மட்டுமே இதுவரை மரணச் செலவு பெற்றுள்ளனர்

யாழ் மாவட்டத்தில் கடந்த ஆனி மாதத்தின் பின்னர் இராணுவ நடவடிக்கைகள் காரணமாக இறந்தவர்களின் மரணச்செலவுகளுக்காக இதுவரை யாழ் செயலகத்தினால் 13 லட்சத்து 48 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டுள்ளது.

இக்காலப்பகுதிக்குள் இறந்தவர்களின் தொகை இரண்டாயிரத்திற்கும் அதிகமாக இருக்கும் எனப் பொது அமைப்புக்களின் மதிப்பீடுகள் தெரிவிக்கின்ற போதும் 674 பேர் மட்டுமே இச்செலவுத் தொகையைப் பெற்றுள்ளனர்.

உரிய காலப்பகுதியில் இறப்புக்கள் பதிவு செய்யாமையாலும் உரிய ஆவணங்களைச் சமர்ப்பிக்கமுடியாமையாலும் பலர் இதனைப் பெற முடியாதுள்ளனர். (66)

### கிளிநொச்சி...

வில் என். செல்லம்மா (64) வி. யோகேஸ்வரி (26) வி. நேமிநாதன் (05) வி. தர்சிகா (02) ஆகியோர் படுகாயமடைந்துள்ளதுடன் இவர்களின் வீடும் தரைமட்டமாகின.

மாங்குளம் கொல்லர் புளியங்குளத்தில் நேற்று நண்பகல் இடம்பெற்ற பொம்மர் தாக்குதலில் யசிந்தா சேவியர் (45) சில்லாலை, எம். ஆரோக்கியநாதன் (62) சில்லாலை ஆகியோர் காயமடைந்தனர். இவர்களின் வீடும் சேதமானது.

சாவகச்சேரி நுணாவில் பகுதியில் மாலை பஸ் மீது நடாத்திய ஹெலித் தாக்குதலில் இ. இராஜேஸ்வரி அம்மா (54) கொக்குவில், அன்ரனிற் நிக்கலஸ் (36) யாழ்ப்பாணம். எஸ். ரட்ணராணி (30) நல்லூர் ஆகியோர் காயமடைந்தனர். ஆபத்தான நிலையில் ஒருவர் இருப்பதாகவும் தெரியவருகிறது. (66)

### மன்னார்...

கப்பட்டவர்களை உடனடியாக விடுவிக்க நடவடிக்கை எடுப்பதோடு, எதிர்காலத்தில் இவ்வாறான சம்பவங்கள் மீண்டும் நடைபெறாது பார்த்துக்கொள்ள தேவையான நடவடிக்கை மேற்கொள்ளுமாறு வற்புறுத்தப்பட்டுள்ளது.

### ஆசிரியர்கள்...

வருகின்றனர்.

நேற்று முன்தினம் முருங்கன் மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த 500 மாணவர்கள் வீதி மறியல் போராட்டத்தை நடாத்தினர். இவர்களின் போராட்டத்திற்கு ஆதரவாக பொது மக்களும் கலந்து கொண்டனர்.

வீதி மறியலின் போது அப்பகுதியால் வந்த ஐ.நா வின் சிறுவர் பாதுகாப்பு நிதியப் பிரதிநிதிகளின் வாகனங்களும் வழிமறிக்கப்பட்டது. இவர்களிடம் மாணவர்களால் சில மகஜர்கள் அங்கு வைத்து கையளிக்கப்பட்டது போராட்டம் ஒரு வாரத்துக்கு நடைபெறும் என தெரிவிக்கப்படுகிறது. (71)

# பூநகரியில் இரவுத்திருடர்

பூநகரிப் பகுதியில் சைக்கிள் வியாபாரிகளிடம் கொள்ளையர்கள் கொள்ளையடித்து வருகின்றனர்.

சைக்கிளை விட்டு விட்டு பூநகரி வாடியில் உறங்கும் போது எரிபொருளுக்காக எடுத்துச் செல்லும் கொள்கலன், சைக்கிள் உதிரிப்பாகங்கள்போன்றவை இரவுவேளையில் திருடப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது. (38)

### 9-ம் ஆண்டு...

நடாத்தப்படும்.

9-ம் ஆண்டில் இப்பாடநெறி கட்டாயபாடமாக உள்ளதுடன், சித்தியடையும் மாணவருக்கு "கனிஷ்ட தொழில்நுட்ப தராதரப்பத்திரம்" வழங்கப்படும் என்பதும் குறிப்பிடத்தக்கது. (70)

### கொள்ளைலாபம்...

செலவில் கப்பலில் தருவித்து வழங்கிவருகிறது.

முன்னர் 5 சதமாக விற்பனை செய்யப்பட்ட விற்றமின் குளிசைகள் 60 சதமாகவும், ஒரு ரூபாவாக விற்பனை செய்யப்பட்ட 'அம்பிசிலீன்' மாத்திரைகள் 5 ரூபா 50 சதம் முதல் 6 ரூபா வரையாகவும், 50 சதமாக விற்ற சாதாரண பனடோல் இரண்டு ரூபாவாகவும் விற்பனை செய்யப்படுகிறது.

இது தவிர பல அத்தியாவசிய மருந்து வகைகள் பல மடங்கு விலை கூட்டப்பட்டு விற்பனை செய்யப்படுவதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (74)

# தரைத் தாக்கை ஆரம்பிக்க இறுதிக்கட்ட முயற்சி சவுதியில் பூர்த்தி

அமெரிக்கா விதித்துள்ள காலக்கெடு நகைப்பிற்கிடமானது, வெட்கக்கேடானது என ஈராக் ஜனாதிபதி ஹுசைன் தெரிவித்துள்ளார். சோவியத் திட்டத்தை நிராகரித்ததன் மூலம் அமெரிக்கா போரில் உள்ள தனது ஆர்வத்தைக் காட்டுகிறது என அவர் குறிப்பிட்டார்.

தரைத் தாக்குதலை ஆரம்பிப்பதற்கான சகலவித இறுதிக்கட்ட நடவடிக்கைகளும் பூர்த்தியாகி விட்டதாக சவுதியில் அமெரிக்க நேச அணி அதிகாரிகள் அறிவித்துள்ளனர். இராணுவப் பொறியியல் பிரிவைச் சேர்ந்தவர்கள் இராணுவ தளபாடங்களை இறுதி முறையாகபரீட்சித்துப் பார்த்துவிட்டனர்.

இதற்கிடையே குவைத்தில் உள்ள 900 எண்ணெய்க் கிணறுகளுக்கு ஈராக் தீவைத்துள்ளது. இதனால் குவைத் வான் பரப்பு எங்கும் கரும்புகை மண்டலமாகக் காணப்படுகிறது. ஈராக்கின் எண்ணெய்ப் பொறி இடங்குகள் மீது நேற்று அமெரிக்க விமானங்கள் நேபாம் குண்டுகளை வீசின.

# செம்மணி, கல்லுண்டாய் பகுதியில் மீண்டும் உப்பு உற்பத்தி ஆரம்பிக்கும்

செம்மணியிலும், கல்லுண்டாயிலும் உள்ள உப்பளங்களில் உப்பு உற்பத்தியை மீண்டும் மேற்கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக உப்புக் கூட்டுத்தாபன அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

வடபகுதியில் உப்புக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டை நீக்குவதற்காகவே இந்நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

ஆனையிறவு, குறிஞ்சாத்தீவுப் பகுதிகளில் உப்பு உற்பத்தி செய்யப்பட்டதால் செம்மணி, கல்லுண்டாய் உப்பளங்களின் உற்பத்தி முன்னர் கைவிடப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை கரணவாய், தொண்டமனாறு பகுதிகளிலும் உப்பு உற்பத்தியை மேற்கொள்ள முடியுமெனவும் தெரிவிக்கப்படுகிறது.

## உப உணவுச் செய்கை ஆரம்பம்

வடமராட்சி கிழக்கில் அறுவடைமுடிவடையும் தறுவாயில் உள்ளதால் உடனேயே இந்நிலங்களில் உப உணவுச் செய்கையை மேற்கொள்ளுமாறு உதவி அரச அதிபர் உத்தரவிட்டுள்ளார்.

தரிசாக விடப்படும் நிலங்கள் பகிர்ந்தளிக்கப்படும் எனவும் அவர் கூறியுள்ளார்.

### வடபகுதி...

வடபகுதி மின்சார சபையைச் சேர்ந்த 50 வீதமான சகலதர அதிகாரிகள், ஊழியர்களை முதற்கட்டமாக இடமாற்றுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது. (70)

### அரசாங்க...

ரைத் தூக்கி விசிலிட்டனர் என்றும் முக்கிய எதிர்க்கட்சி எம். பி. ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

ஐ. தே. க. காடையர்களாலும், அரச படைகளாலும் அமைதியாக எதிர்ப்புத் தெரிவிப்பவர்கள் மீது வன்முறை கட்டவிழ்த்து விடப்படுகிறது

வேக்கந்த பள்ளிவாசலிலும், கண்டி தலதா மாளிகாவையிலும் இடம்பெற்ற சம்பவங்கள் இதற்கு உதாரணம் எனவும் அந்த எம். பி. சுட்டிக் காட்டியுள்ளார்.

### இராணுவத்தின்...

தீவுக்கு எடுத்துச் செல்ல இராணுவம் அனுமதி வழங்காததால் 12 லொறிகளில் உள்ள உணவுப் பொருள்களும் பழுதடையும் நிலையில் உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (38)

### தாய்லாந்து...

உயர் பீடத்திற்கும் இடையே பலகாலமாக முறுகல்நிலை இருந்து வந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

### வடபகுதிக்கு...

நடத்திய பேச்சுவார்த்தையைத் தொடர்ந்து பாதுகாப்பு அமைச்சுடன்தொடர்பு கொள்ளப்பட்டதாகவும் அறிவிக்கப்படுகிறது. மின்சாரம் வழங்க பாதுகாப்பு அமைச்சே மறுத்து வருகிறதாம் (70)

இப்பத்திரிகை முரசொலி பப்ளிகேஷன்ஸ் (பிறைவேட்)லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ் கஸ்தூரியார் வீதி, "லக்ஷ்மி பில்டிங்ஸ்" உள்ள அச்சகத்தில் 24-02-1991 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது